Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-6 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 8-6-1946 வைகாசி மீ 26உ { மலர் 35

காங்கரஸ் கட்டுப்பாட்டின் வண்டவாளம்

இன்றைய காங்கரஸ் மந்திரிசபை எவ்வளவு உள் போராட்டத்தில் இருக்கிறது என்று பார்த்தால், மற்ற கட்சிகள் அதைவிட எவ்வளவோ மேலானது என்று கருத இடமுண்டு. பதவி காரணத்தால் காங்கரசாரும் தங்களுக்குள் போராட்டம் செய்து கொண்டு இருக்கிறார்கள். சுதேசமித்திரன் பத்திரிகையானது தனது 5ந்தேதி தலையங்கத்தில் மந்திரிசபை மீது 20 குற்றச்சாட்டுகள் எடுத்துக் கூறி இருக்கிறது.

1. காங்கரஸ் மந்திரிகள் தங்களுடைய யோசனைகளை வெளியிடும் முன் அவைகளைப்பற்றி சரியாய் சிந்திப்பதில்லை.

2. தங்கள் கூட்டும் சட்டசபை எத்தனை நாளைக்கு நடக்கும் என்று கூட தெரிந்துகொள்ள முடியாமல் மந்திரிகள் அங்கத்தினர்களுக்கு சிரமம் கொடுக்கிறார்கள்.

3. மெம்பர்களுக்கு சரியானபடி கவலை இல்லை. சட்டசபையில் சரியானபடி இருப்பதில்லை. சபை நடத்தும் நேரங்களில் வெகு காலியாக இருக்கிறது.

4. அவர்களது விவாதங்களில் கட்டுப்பாட்டுக்கு ஒத்த முறை இல்லாதது துக்ககரமானது.

5. பிரதம மந்திரி தாம் வெளியிடும் விஷயத்தைச் சரிவர உணர்ந்துகொள்ளாமலேயே பேசுகிறார்.

6. தெளிவான நோக்கம் இல்லாமலே திருத்தப்பிரேரேபணைகள் வருகின்றன, விவாதிக்கப்படுகின்றன.

7. அனாவசியமாய் பயனில்லாமல் காலமும் பணமும் செலவாகின்றன.

8. பிரதம மந்திரி தன் வசமே எல்லா முக்கியப் பொருப்புகளையும் வைத்துக்கொண்டு இருக்கிறார்.

9. பிரதம மந்திரி இடம் இருந்து இந்த பாரம் இறக்கப்பட்டாக வேண்டும், இல்லாவிட்டால் மக்களுக்கு கேடு வந்துவிடும்.

10. பிரதமர் சொன்னபடி மந்திரிகள் ஏற்படுத்தாமல் இரண்டு ஸ்தானத்தை நிறுத்திக்கொண்டிருக்கிறார்.

11. காரியதரிசிகளையும் இன்னம் நியமிக்கவில்லை.

12. தாமதம் செய்வது சந்தேகத்துக்கு இடமானதாகும்.

13. காங்கரஸ்கட்சி கட்டுக்குலைந்து சிறுசிறு கூறாக சிதறிவிட்டது.

14. ஒவ்வொன்றும் தன்தன் சுயநலமே குறியாகக்கொண்டு பிரிந்து கொண்டன.

15. கட்சிக்கூட்டத்தில் அசம்பளி, கவுன்சில் தலைமைப்பதவிக்கு கட்சியினால், நிர்வாகக்கமிட்டியால் நிறுத்தப்பட்ட (அபிஷியல் கேண்டிடேட்) நபர் வெற்றிபெறாமல் தனித்து போட்டிபோட்டநபர் வெற்றி பெற்று இருக்கிறார். இது நிர்வாகக் கமிட்டிமீது கட்சி அங்கத்தினர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை காட்டுகிறது.

16. சென்னை காங்கரஸ்கட்சி நிலை மிக அதிருப்திகரமானதாகும்.

17. இதை இருக்க விடுவது பொதுமக்களுக்கு அநீதி செய்வதாகும்.

18. இந்த யோக்கியதை உள்ள கட்சி காங்கரஸ் மேலிடத்து யோசனையை அலட்சியம் செய்ததை மேலிடத்தார் குற்றமாகக்கருதி அலட்சியமாய் இருந்தால் காரியம் கெட்டுவிடும்.

19. இப்போது காங்கரஸ்காரர்களிடம் பின்வரும் கோணலான தன்மையில் போக்கும் கட்டுப்பாடற்ற தனமான நடப்பும் இருந்து வருகிறது.

20. தோழர்கள் ஆஜாத் அல்லது பட்டேல் உடன்வந்து மாற்றியமைக்க வேண்டும்.

என்பதான 20 குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

ஆகவே இதிலிருந்து காங்கரசின் வண்டவாளம் இன்னதென்று பொது மக்கள் அறிந்துகொள்ளலாம்.

அதிகாரம், பணம், பத்திரிக்கை ஆகியவைகள் இருப்பதால் இவ்வளவு மோசமான தன்மையுடைய மக்களிடம் நம் "பிரதிநிதித்துவம்" சிக்கிக்கொண்டு நம்மையும் நாட்டையும் பாழாக்குகிறது. திராவிடர்களுக்கு என்று புத்தியும் மானமும் வந்து அந்தச்சுயநலக்கூட்சி நரகத்தில் இருந்து கரையேறுவார்களோ?

உறக்கமா?

எங்குபார்த்தாலும் எழுச்சி இயக்கத்திற்கு ஒரு வளர்ச்சி என்று சொல்லிக்கொண்டேயிருந்தாலும் இன்னும் ஒரு இலட்சம் உறுப்பினர்கள் சேர்த்தபாடில்லை! எழுதிப்பெற்ற தோழர்களும் அமைதிக்கு வழியமைத்துக்கொண்டேயிருக்கின்றனர்!

நமது எண்ணம் ஈடேற நமது முயற்சி ஆரம்ப அசகாயசூரத்தனமாக இருக்கக்கூடாது. நாம் செய்யவேண்டியது எவ்வளவோ உண்டு. இருந்தாலும், கழகத்தின் சிறப்பு, அது பெற்றுள்ள உறுப்பினர்களைத்தான் சார்ந்திருக்கிறது.

ஆதலால் சிறப்பாக இளைஞர்களும் குறிப்பாக மாணவர்களும் உடன் கிளம்பவேண்டும்! உடன் சேர்க்கவேண்டும்! இதுவே அவர்கள் ஆற்றும் முதற்பணி! பணியாற்ற கிளம்புங்கள்!

குடந்தை மாநாடுகள்

திராவிடர் மாநாடு

கும்பகோணம் ரயில்வே நிலையத்திற்குக் கிழ்புறம் அமைத்திருக்க "சர் பி. தியாகராயர்" பந்தலில் 18-5-46 சனிக்கிழமை காலை திராவிடர் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு பல ஜில்லாக்களிலிருந்தும் முதல்நாள் இரவிலிருந்தே ஏராளமான ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் கருஞ்சட்டையுடன் வந்தவண்ணமிருந்தனர். அன்று காலையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையும் மற்ற தலைவர்களையும் ரயில்வே நிலையத்தில் பாண்டு வாத்தியங்களுடன் கல்லூரி மாணவத் தொண்டர்களின் அணிவகுப்புடன் வரவேற்கப்பட்டது. முதலில் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் கொடி ஏற்றினார். தோழர் C. D. T. அரசு அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார். வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் வரவேற்புரையை வாசித்தார். (முன்னர் வெளியாகிவிட்டது) பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி அவர்கள் திராவிடர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் பெரியார் அவர்கள் திராவிடர் நிலை குறித்தும், மதுரை சம்பவத்தைக் குறித்தும் மிக்க உருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இத்துடன் இடைவேளை உணவுக்கு மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. பிறகு மீண்டும் மாநாடு 3 மணிக்குக் கூடிற்று.

தோழர் கே. அன்பழகன் எம். ஏ., சொற்பொழிவாற்றிய பின்னர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் "தற்கால அரசியல் நிலை" என்பது பற்றி விளக்கமாக சொற்பொழிவாற்றினார்கள்.

தோழர் எம். சிங்காரவேலு அவர்களின் மறைவிற்கு வருந்தியும், திருச்சியில் நடைபெற்ற மாகாண மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்தும், கருஞ்சட்டைப் படையினருக்கு வேண்டிய கருப்புத் துணிகளை ஏராளமாகக் கிடைக்குமாறு சப்ளை கமிஷனரை சப்ளை செய்யுமாறு வேண்டியும், மதுரை சம்பவத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் முடிவுரைக்குப்பின் சாக்கோட்டை தோழர் எஸ். ஆர். சாமி நன்றிகூற மாநாடு இனிது முடிந்தது.

அன்று இரவு 10 மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தார் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகத்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்தினர்.

பெரியார், இம்மாதிரியான நாடகங்கள் நடைபெறவேண்டியதைக் குறித்து பேசிய பின்னர் தோழர் எஸ். ஆர். சாமி நன்றி கூற முதல் நாள் நடவடிக்கை முடிந்தது.

சுயமரியாதை மாநாடு

19-5-46ல் சுயமரியாதை மாநாடு ஆரம்பமாயிற்று. மாநாட்டுத் தலைவர் விருதுநகர் தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை ரயில்வே நிலையத்தில் ஆயிரக்கணக்கான கருப்புச்சட்டைப் படையினர், வரவேற்புக்கழகத் தலைவர்கள் உள்பட வரவேற்றனர். நேரலம் தோழர் எ. சித்தையன் கொடியேற்றுவிழா சொற்பொழிவாற்றினார். தோழியர் இராமாமிர்தத்தம்மையார் மாநாட்டுத் திறப்புவிழா வாற்றினார்கள். தலைவர் முன்னுரையுடன் மாநாடு இடைவேளை உணவுக்காக ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 3 மணிக்கு மாநாடு தொடங்கிற்று. தோழர்களான ஈ. வி. கே. சம்பத், வீரமணி, புலவர் ஆறுமுகம், இரா. நெடுஞ்செழியன், ஏ. பி. ஜனார்த்தனம், காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். பெரியார் உடல் நலம் குன்றியிருந்தபடியால் இன்று காலையிலேயே ஈரோட்டிற்குப் புறப்பட்டார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேறின.

தீர்மானங்கள்

1. திருச்சியில் நடைபெற்ற மாகாண சுயமரியாதை மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை இம்மாநாடு ஆதரிக்கிறது.

2. மதுரையில் கருப்புச்சட்டைப் படை மாநாடு சிறப்புடன் நடைபெற்றதைக்கண்டு பொறாமைகொண்ட காங்கிரஸ்காரர்கள் செய்த காலித்தனத்தையும், கலகத்தையும் இம்மாநாடு கண்டிப்பதுடன் இச்செய்திகளை திருத்தியும் மாற்றியும் எழுதி யனுப்பிய நிருபர்களையும், வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர்களையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

3. சுயமரியாதை இயக்கத் தோழர்கள் கருஞ்சட்டைப்படையில் ஏராளமாகச் சேர்ந்து பெரியார் அவர்களுடைய கட்டளைகளை கட்டுப்பாட்டுடன் நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

4. ரயில்வே தொழிலாளருடைய நியாயமான கோரிக்கைகளை இம்மாநாடு பூரணமான அனுதாபத்துடன் ஆதரிப்பதோடு அவர்களது கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்த அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

தலைவர் முடிவுரையுடன் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் நன்றி கூறுதலுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

இரவு (நாடகம்)

8-30 மணிக்கு கல்லூரி மாணவர்களால் கும்பகோணம் பி. முத்துதனபாலன் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் "குமரிக்கோட்டம்" என்ற நாடகம் நடந்தது.

10-மணிக்கு காஞ்சி திராவிடநடிக கழகத்தாரால் "சந்திரோதயம்" நாடகம் தஞ்சை தோழர் பி. வேணுகோபால் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இன்று இரவு சுமார் 15 ஆயிரம் மக்கள் கூடியிருந்தனர்.

மாநாட்டில் தலைவர்கள் தங்குவதற்குப் பல இடங்களும், தண்ணீர் வசதிக்காக கிணற்றிலிருந்து தனி இஞ்சின்மூலம் தண்ணீர் இறைக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. உணவுவிடுதி தனியே அமைக்கப்பட்டிருந்தது. இரண்டு நாட்களிலும் பெரியார் அவர்களின் தமையனார் தோழர் ஈ. வி. கிருஷ்ணசாமி அவர்கள் குடும்பத்தோடு வந்து கலந்துகொண்டார்கள். மாநாடு மிக்க வெற்றிகரமாக, சிறப்பாக நடைபெற்றதற்கு தோழர்கள் அனைவரும் ஒத்துழைத்தனர். முக்கியமாக கல்லூரி மாணவர்களும், தொண்டர் படையினரும் தோழர்களான கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, பி. ஆர். பொன்னுசாமி, ஆர். பாக்கியம், எஸ். எஸ். கோவிந்தசாமி, வி. லட்சுமிபதி, கே. கணபதி, எஸ். ஆர். சாமி முதலியவர்களின் தொண்டும் சிறந்ததும் மறக்கமுடியாததாகும். தோழர் வி. லட்சுமிபதி நன்றிகூறினார்.

மதுரை கலவர விசாரணை

தோழர் ஆ. திராவிடமணி அறிக்கை

மதுரையில் கடந்தமாதம் 11. 12ம் தேதிகளில் நடைபெற்ற கறுப்புச் சட்டைப்படை மாகாண மாநாட்டில் நடைபெற்ற குழப்பங்களைப்பற்றி ஒரு பொதுஜன விசாரணை நடத்த வேண்டுமென்று மாநாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் விடுத்த அறிக்கைக்கிணங்க சர்க்கார் விசாரணை ஆபீசரை நியமித்திருக்கிறார்கள். ஆனால் மதுரையில் நடந்த சம்பவங்களுக்கு எந்த சமூகத்தார் தூண்டுதல் செய்தார்களென்று நாம் குறைகூறுகிறோமோ அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்திருப்பதானது மதுரைக் கலவரத்தால் துன்பப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்குமா என்ற பெரிய அச்சத்தைக் கொடுக்கிறது. பெரியார் அவர்கள் ஷை விசாரணை அதிகாரியாக ஒரு பார்ப்பனரை நியமித்திருப்பதற்குப் பதிலாக வேறு ஒருவரை அதாவது கிறிஸ்தவர், முஸ்லிம், ஐரோப்பியர் ஆகியவர்களில் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கு முடிவேற்பட்டபிறகே விசாரணையில் நமக்கு உள்ள பங்கு இன்னது என்று தெரிய வேண்டும்.

எப்படியிருப்பினும் மதுரைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களும், பறிகொடுத்தவர்களும், சம்பவத்தை நேரில் கண்டவர்களும் விசாரணையில் சாட்சியம் கொடுக்கவேண்டி ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனதால் அம்மாதிரியானவர்கள் தங்கள் பெயர் விலாசம், அனுபவித்த அறிந்த செய்தி ஆகியவைகளுடன் எல்லா விவரங்களையும் விளக்கமாகக் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு எழுதக் கேட்டுக் கொள்கிறேன். இதை முக்கியவேண்டுகோளாகக் கருதவேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி,
பொதுச்செயலாளர்
மத்திய திராவிடர் கழகம்,
2, பாலகிருஷ்ணபிள்ளை தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

"விடுதலை"

(தினசரி)

ஜூன் 6ந் தேதி முதல் வெளிவருகிறது.

சந்தா விவரம் (தபால் மூலம்)

ஆண்டு 1க்கு	ரூ. 15-0-0	3-மாதங்களுக்கு	ரூ. 4-4-0
6-மாதங்களுக்கு	ரூ. 8-0-0	1-மாதத்திற்கு	ரூ. 1-8-0

மூன்று மாதம், அல்லது அதற்கு மேற்பட்ட கால சந்தாவே எதிர்பார்க்கிறோம். ஒரு மாத சந்தா அனுப்புவதால் காரியாலயத்தில் பதிவு செய்யவும், விலாசம் அச்சிடவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே தோழர்கள் குறைந்தது மூன்றுமாத சந்தாவே அனுப்ப வேண்டுகிறோம். இதுவரை ஒருமாத சந்தாவாக ரூ. 1, $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$ எனப் பலவாறாக அனுப்பியவர்களுக்கு ரூ. 1க்கு 20 நாட்களுக்கும், ரூ. $1\frac{1}{4}$க்கு 25 நாட்களுக்குமே விடுதலை அனுப்பப்படுமாதலால் இவ்வாறு அனுப்பியுள்ள தோழர்கள் உடனே தயவுசெய்து 3மாத சந்தாவாகச் சேர்த்து பாக்கித்தொகையை அனுப்ப வேண்டுகிறோம்.

மானேஜர்; "விடுதலை"
2, பாலகிருஷ்ணபிள்ளை தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

மாணவர் சுற்றுப்பிரயாணம்

தஞ்சை மாவட்டம்

தோழர்கள்: சிறுவன் வீரமணி, புலவர் ஆறுமுகம், வி. வேணுகோபால், தில்லை வில்லாளன் ஆகியோர்.

10-6-46 அதிராம்பட்டினம்
11— ராசாமடம்
12— அறந்தாங்கி
13— பேறாவூரணி
14— அணைக்காடு
15— காலை நடுவிக்கோட்டை
மாலை ஒரத்தநாடு
16— பட்டுக்கோட்டை
17— செங்கம் படுத்தான்காடு
18— ஓலையர்குன்னம்
19— பெரியகோட்டை
20— மதுக்கூர்
21— ஓய்வு

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன். பட்டுக்கோட்டை வட்டத்தில் தோழர் சி. என். விசுவநாதன் உடனிருந்து ஒத்துழைப்பார்.

வி. எஸ். பி. யாகூப்,
C/o சி. என். விசுவநாதன்,
திராவிடர்கழகம், பட்டுக்கோட்டை.

தென்னாற்காடு மாவட்டம்

தோழர்கள் புலவர் மாணிக்கம், அவர்கள் தலைமையில் புலவர் தியாகராசன், சொ. குப்புசாமி ஆகியோர் பிரசாரஞ்செய்து வருகின்றனர்.

10—மாலை கணிசப்பாக்கம்
11—மாலை பண்ருட்டி
12— வண்டிப்பாளையம்
13— விழுப்புரம்
14— அன்னியூர்
15— உளுந்தூர்பேட்டை
16— திட்டக்குடி (ஆண்டுவிழா)
17— திண்டிவனம்
18— காவேரிப்பாக்கம்
19— தாதாபுரம்
20— இரெட்டணை
21— கோவடி
22— ஒலக்கூர்

மற்ற ஊர்கள் விவரம் அடுத்த இதழில்.

பிறப்பு

லால்குடி தாலுக்கா நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழகச் செயலாளர் தோழர் என். எம். நாகராசன் அவர்கள் அண்ணனார் மா. பொன்னனுக்கும், எஸ். பழனியம்மைக்கும் பிறந்த பெண் குழந்தைக்கு திராவிடமணி என்று பெயர் வைத்ததின் நினைவாக குடியரசுக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

குடி அரசு

1946 ௵ ஜுன்௴ 8உ

நம் இயக்க தினசரி

எப்போது வரும், எப்போது வரும் என்று ஏங்கித்தவித்து எதிர்பார்த்துக்கொண்டிருந்த "விடுதலை" தினசரி பத்திரிகை இம்மாதம் 6ந் தேதியிலிருந்து சென்னையில் வெளியாகிவிட்டது.

ஆனால் "நமக்கும் ஒரு தினசரி இருக்கிறது" என்று சொல்லிக்கொள்ளத்தான் இது பயன்படுமே தவிர ஒரு இயக்கத்திற்கு ஒரு தினசரியால் என்ன பலன் ஏற்படுமோ அந்தப் பலன் ஏற்படுமா என்பது உறுதிகூற முடியாததேயாகும். ஏனெனில் விடுதலைக்கு மிகுந்த குறைவான அளவு காகிதமே கோட்டாவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கேட்ட அளவில் 16ல் ஒரு பாகம்தான் சர்க்கார் அனுமதித்து இருக்கிறார்கள். இதைக் கொண்டு நமக்கு ஏற்பட வேண்டிய நலத்தில் 16ல் ஒரு பாகம்தான் பயன் ஏற்படக் கூடும். இன்று தமிழ்நாட்டில் நம் இயக்கம் 50,000 அங்கத்தினர்களையும், 300 கிளைகளையும், 2000 தொண்டர்களையும் கொண்டு இருக்கிறது என்பது யாவரும் முக்கியமாய் சர்க்காரும் அறிந்த உண்மை. நம் பத்திரிகை தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இரண்டரைக் கோடி தமிழ் மக்கள் படித்துணரவேண்டும் என்னும் ஆவலின்மீது நடத்தப்படுவதாகும்.

பொதுவாகவே இன்றைக்கு 25 வருடத்திற்கு முன் இருந்த பத்திரிகை படிக்கும் மக்கள் எண்ணிக்கையைவிட இன்று ஐம்பது பங்குக்கு அதிகமான மக்கள் பத்திரிகை படிக்கிறார்கள் என்றால் அது மிகைபடுத்திக் கூறுவதாக ஆகாது.

25 வருடத்திற்கு முன்பு 3 ஆங்கில தினசரி, இரண்டு அல்லது 3-தமிழ் தினசரி, 5, 6-வாரப்பத்திரிகை இவைகளுக்கு சந்தாதாரர்கள் 1000 முதல் 10000க்குள்ளாகவே இருந்தனர். இன்று இவை பலமடங்கு பெருகி ஒரு பத்திரிகை பலபேர் படிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமல்லாமல் பத்திரிக்கைகள் முன்னையைவிட அதிக செல்வாக்கும் பெற்று அரசியல் சமூக இயல், மதம் பொருளாதாரம் அறிவு முதலியவைகளுக்கு வழிகாட்டித் தன்மையையும் பெற்றுவிட்டன. இந்த நிலையில் நாம், திற்கதியான திராவிட சமுதாயத்தாரான நாம், சகல துறையிலும் கீழ்மக்களாக தாழ்த்தப்பட்டவர்களாக பிற்படுத்தப்பட்டிருக்கும் நாம் நம் நலனுக்கு என்று இருக்கும் ஒரே இயக்கமாகிய திராவிட கழக இயக்கத்திற்கு ஆக நடத்தப்படும் ஒரு பத்திரிகைக்கு காகிதம் நாம் கேட்டதில் 16ல் ஒரு பங்கு கொடுத்து 'அவ்வளவு தான் புனராலோசனை செய்ய முடியாது' என்று அரசாங்கம் முடிவு செய்துவிட்டால் நாம் நம் நிலையைப்பற்றி வெட்கப்படுவதைத் தவிர மற்றபடி யார் மீது குறைகூறமுடியும்? ஆகவே அந்த வெட்கக்கேட்டுடன் மனந்தளராமல் உள்ளதைக் கொண்டு நம்மாலானதைச் செய்யலாம் என்ற கருத்தின் மீது துணிந்து "விடுதலை" தினசரி துவக்கப்பட்டிருக்கிறது.

சரி, எப்படியோ ஒரு வகையில் நம் கடமையை நாம்செய்யத் தொடங்கிவிட்டோம். பத்திரிகையும் வெளியாகிவிட்டது. இனி திராவிடர்கள் (தமிழர்கள்) கடமை என்ன? அதை ஆதரிக்க வேண்டும், பல அசௌகரியங்களுக்கிடையில் ஆர்வமுள்ள இளைஞர்களைக் கொண்டு துவக்கப்பட்டிருக்கிற படியால் அதில் பல குறைகள் காணப்படலாம். அவைகளை மன்னித்து அதை ஆதரிக்க முன்வரவேண்டியது முதற்கடமையாகும். அதற்கு பொருளாதார உதவி, உண்மையானசேதி உதவி, அதிக சந்தாதாரர்கள் சேர்க்கும் உதவி, மக்களைப் படிக்கும்படி தூண்டி ஒரு பத்திரிகையை 10பேர் விதமாவது படிக்கும்படி செய்யும் உதவி வாசகசாலை முதலியவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பத்திரிகைவீதம் போய்ச் சேரும்படி செய்யும்படியான உதவி, விளம்பர உதவி முதலிய உதவிகளை ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் கூடுமான வரை செய்து அதை வளர்த்துக் காக்கவேண்டியதும் முக்கிய கடமையாகும்.

"விடுதலை"யில் சேதிகள் சொற்பொழிவுகள் முதலியவைகள் முக்கிய இடம் பெருமாதலால் குடி அரசில் சேதிகளை இயக்க அன்பர்கள் அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது என்று வேண்டிக்கொள்ளுகிறோம். சேதிகளை விடுதலைக்கும் சுருக்கமாகவே எழுதவேண்டுமென்று வேண்டுகிறோம். இயக்கக் கிளைஸ்தாபனங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விடுதலை இருக்கும்படி செய்யவேண்டுமென்றும் வேண்டுகிறோம். ஆகவே திராவிடத்தோழர்கள் விடுதலைக்கு நல்வரவுகூறி ஆதரிக்கவேண்டுகிறோம்.

"குடி அரசு" அதன் பழைய முறைப்படி ஏதோ ஒரு வகையில் நடந்துகொண்டு இருக்கும் எனவே அதையும் வழமைபோல் ஆதரித்துவர வேண்டுகிறோம்.

இந்த பத்திரிக்கை காரணங்க

நடக்க இருப்பவை

13-6-46ல் வேலூர் தோட்டப்பாளையம் அருகந்தம்பூண்டி பெரிய தெரு 91 இலக்கமுள்ள இல்லத்தில் திரு சி. வே. லோகநாதன் அவர்கள் மகன் தோழர் சுப்பிரமணியனுக்கும் திரு கோவிந்தராச முதலியார் அவர்கள் மகள் தோழியர் மனோன்மணிக்கும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். வருகை தருக!

13-6-46வியாழன் மாலை வேலூர் கோட்டை வெளியில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ.வெ. ரா. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் வருக!

தோழர்கள் கவனிக்க!

திராவிடர் தினசரியாகிய விடுதலை 6-6-46 முதல் நடைபெறுவதால் இயக்கச்செய்திகளும், பிற செய்திகளும் அனுப்பும் தோழர்கள் இனிச் செய்திகளை விடுதலைக்கே சுருக்கமாக எழுதி அனுப்பிவைக்க வேண்டுகிறோம். அடுத்தவாரம் முதல் குடி அரசில் பெரும்பாலும் கட்டுரைகள் வெளிவரும். ஆதலால் அதற்கு செய்திகள் அனுப்பாமல் இருக்க வேண்டுகிறோம்.

ளால் பெரியார் ஈ. வெ. ரா. முன்போல் அடிக்கடி வெளியில் வர முடியாததால் அன்பர்கள் அருள்கூர்ந்து கல்யாணம், காதுக்குத்துதல், ஆண்டுவிழா, திறப்புவிழா போன்ற "சுப" காரியங்கள் என்பவைகளுக்கு சம்மன், வாரண்டு அனுப்பாமல் இருக்கவேண்டுமாய் வேண்டிக்கொள்கிறோம். கண்டிப்பாக, அவசியமாக பெரியாரே வரவேண்டுமானால் "விடுதலை" நன்கொடைக்கு பெருத்த 'கட்டணம்' கட்ட வேண்டி கேட்க நேரிடுமாதலால், அப்படி நேரிடும்போது மன்னித்தருள வேண்டுகிறோம். ஏனெனில் இப்படிச் செய்தாலொழிய அழைப்பு குறையாது என்பதோடு "விடுதலை"க்கும் நஷ்டஈடு ஏற்படாது என்று கருதி இப்படி எழுதுகிறோம்.

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

8-6-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 46,470

இம்மாதம் 8உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

1. சேலம்	8041	7. சென்னை இவ்வாண்டில் 1138 }	3008
2. தஞ்சை	7624	8. இராமநாதபுரம்	2883
3. கோவை	6190	9. தென் ஆற்காடு	2553
4. திருச்சி	5496	10. மதுரை	1874
6. வடஆற்காடு	3538	11. செங்கல்பட்டு	1000
5. திருநெல்வேலி	3448	12. மற்ற இடங்களில்	815

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

கோவை மாவட்ட திராவிடர் கழக மாநாடு

ஈரோடு நாகம்மையார் பந்தலில்

16-6-46 ஞாயிறு நடைபெறும்

தலைவர்: S. R. சுப்பிரமணியம்

திறப்பாளர்:- குடந்தை முத்துதனபால் B. A., B. L.,

கொடியேற்றுபவர்:- பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி

மற்றும் பெரியார், காஞ்சி—கலியாணசுந்தரம், இளைய பட்டக்காரர் N. அர்ச்சுனன், நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், சனார்த்தனம், அன்பழகன், சிறுவன் வீரமணி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

அனைவரும் வருக!

நாடகமும் உண்டு

வரவேற்புக்கழகத் தலைவர்:- எம். கே. குகநாதன்.

செயலாளர்கள்:- ஆர். ஹரிதுசாமி, ஆர். நாராயணசாமி.

திருமணம்

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக்கல்லூரித் தலைமையாசிரியத் தோழர் டி என். சாமிநாதபிள்ளையவர்கள் மகள் தோழியர் காமாட்சிக்கும் திருச்சேறை தோழர் வே. சுப்பராயபிள்ளையவர்கள் மகன் தோழர் சிவசுப்பிரமணியனுக்கும் 6-5-46ல் நடைபெற்ற சிறப்பான திருமணத்தின்போது இசைமணிகள், செட்டிநாடு சேற்றூர் அரசர்கள், மாணவ ஆசிரியத் தோழர்கள், நாடகமணிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோர்களிடமிருந்து செய்திகளும், பரிசுகளும் மணமக்கள் பெற்றனர். திருவெண்காடு சுப்பிரமணியத்தின் இன்னிசையும் நடைபெற்றது.

மாணவத் தோழர்களுக்கு!

ஆங்காங்கேயுள்ள திராவிட மாணவக்கழகச் செயலாளர்கள், உடன் தங்கள் கழகங்களின் பேர், தலைவர், செயலாளர்களை எழுதி அனுப்புவதோடு தயாராகிவரும் உறுப்பினர் புத்தகங்களை எழுதிப்பெற்று ஆக்க வேலையில் இறங்க ஆவனசெய்ய வேண்டுகிறோம். நாள் கடத்தவேண்டாம்!

திராவிட மாணவர் கழக
தலைமை நிலையம், ஈரோடு.

நாகையில்!

6-5-46ல் நாகை ஸ்டார் டாக்கீசில் தோழர் டி. கே. விசயராகவலு பி. ஏ. பி. எல்., தலைமையில் நீண்டகால இயக்கத்தோழர் சி. குட்டலிங்கம் தோழியர் சானகியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் தஞ்சை சப்பண்ணா, புலவர் குழந்தையா, டி. பி. ஆறுமுகம், டி. கே. சீனிவாசன் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

கழகம் அமைத்தார்கள்

2-5-46ல் சேலம் அரிசிபாளையம் திராவிட இளைஞர் கழகத்திற்கு தோழர்கள் கே. பி. லோகநாதன் தலைவராகவும், கே. எல். வேணு கோபால் செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

குற்றாலம்: 8-5-46 அன்று தோழர் சண்முகம் தலைமையில் தோழர் சண்முகம் தலைமையில் தோழர் காஞ்சி கல்யாணசுந்திரம் அவர்கள் திராவிட கழகத்தை திறந்துவைத்தார்கள். மாலையில் தோழர் ரத்தினசாமி தலைமையில் பலர் பேசினர்.

o o

சேத்துப்பட்டு: 8-5-46ல் தோழர் ஆர். வெங்கட்ராமன் தலைமையில் திராவிட கழகம் அமைக்கப்பட்டு தோழர்கள் கோவிந்தன், வேதகிரி, அருணாசலம், பொன்னம்பலம், சந்திரசேகரன் ஆகியோர் தலைவர், துணைத்தலைவர் செயலாளர்கள், பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

வல்லம்: 7-5-46ல் தோழர் இராமதாஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் நடைமுறை ஆண்டிற்கு தோழர்கள் எஸ். பி. சிவம், துரைசாமி, பாலன், சுந்தரராசு, ராமதாஸ் ஆகியோர் தலைவர், துணை, செயலாளர்கள், பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

தோப்பெருமாநல்லூர்: 10-5-46ல் தோழர் எ. வி. ரமணி தலைமையில் திராவிட கழகம் திறக்கப்பட்டு தோழர்கள் எஸ். சாமிநாதன், கே. பி. சாமி, டி. சீனிவாசன் தலைவர், செயலாளர், பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

திண்டிவனம்: 22-4-46ல் திராவிட கழகத்திற்கு தோழர்கள் டி. கே. கந்தசாமி, பி. ராமசாமி, ரா. வெங்கிடேசன், அப்பாண்டை நாதன் ஆகியோர் தலைவர், துணை, செயலாளர், பொருளாளராக தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

o

பாபநாசம்: 10-5-46ல் நடைமுறை ஆண்டிற்கு திராவிட கழகத்திற்கு தோழர்கள் கே. வெங்கிடாசலம் பி. ஏ., ராசமாணிக்கம், சீனுவாசன், நடராசன், கோவிந்தசாமி ஆகியோர் தலைவர், துணை, பொருளாளர், செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று செயற் குழுவும் அமைக்கப் பட்டது.

o o

செங்கற்பட்டு மாவட்டம் சிறுநாகலூரில் 10-5-46ல் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு தோழர்கள் எ. வீரப்பன், நந்தகோபால், வேணு கோபால் முனுசாமி ஆகியோர் தலைவர் செயலாளர்கள், பொருளாளராக தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

o o

28-4-46ல் திருமலைராயன்பட்டினத்தில் திராவிடர்கழகம்திறவப்பட்டு இரத்தினவேல் தலைவராகவும், கணபதி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

o o

நீடாமங்கலம், 1-5-46ல் நடைமுறையாண்டிற்கு திராவிடர் கழத்திற்கு தோழர் அ. ஆறுமுகம் அவர்கள் தலைவராகவும், தோழர்கள் இரத்தினசாமி, இராதா கிருட்டினன் துணைத்தலைவராகவும் தோழர்கள் எஸ். சரவணன் பி.ஏ., சி. ஞானானந்தம், விசுவநாதன் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

7-5-46ல் மாங்குடியில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டு தோழர்கள் முத்தண்ணா, நாகமுத்து, பெ. இரத்தினம், கோ. பெரியசாமி ஆகியோர் தலைவர். துணை, செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

சித்தூரில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு தோழர்கள் தாண்டவராயன், நடேசன், ருத்திரப்பன், சுப்பராயன், சரவணன் ஆகியோர் தலைவர், துணைத்தலைவர். செயலாளர்கள், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

15-5-46ல் நீடாமங்கலத்திற்கடுத்த கடம்பூரில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு தோழர்கள் க. நா. இராதாகிருஷ்ணன், பாலசுப்பிரமணியன், பாண்டியன், கோதண்டபாணி ஆகியோர் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தோழர் ப. சாமிநாதனை கறுஞ்சட்டைப் படைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தோடு ஒரு இலவச வாசகசாலையும் நடத்த உறுதி செய்யப்பட்டது.

o o

13-5-46ல் திருவள்ளூரில் திராவிடர் கழகம் அமைத்து தலைவர் ஆறுமுகம், செயலாளர் இலக்குமணன், பொருளாளர் காமராஜ் தேர்ந்தெடுக்கப்பெற்று செயற்குழுவும் நிறுவப்பட்டது.

o o

4-5-46 பெருக வாழ்ந்தானில் தோழர் சீராமுலு தலைமையில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு பெத்தண்ணாறு தலைவர், மாணிக்கம். துணைத் தலைவர், பிச்சையபா துணைத்தலைவர், சுந்திரம் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

o o

8-5-46ல் கோவை செல்வபுரத்தில் திராவிடர்கழகத் திறப்புவிழா தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றபோது தோழர் என். இ. பாலகுரு கொடியேற்றினார். தோழர் இளங்கோவன் திறந்துவைத்தார். தோழர்கள் இராவணன், இராமசாமி பேசினர்.

o o

18-5-46ல் பாண்டமங்கலத்தில் நடைபெற்ற கமிட்டிக்கூட்டத்தில் தோழர்கள் பாலகுருசாமி, மகாலிங்கசாமி, திருவேங்கடம் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு செயற்குழுவும் நிறுவப்பட்டது.

o

திருவாரூரில்!

9-6-46 மாலை 4மணிக்கு திருவாரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கறுப்புச்சட்டைப்படை ஊர்வலம் தோழர் ஆர். சிங்கம் அவர்கள் தலைமையில் தெருக்கள் வழியாகச் செல்லும். பல இடங்களில் கொடிகள் ஏற்றப்பட்டு தெற்குவீதியில் பொதுக் கூட்டமும் உண்டு! தோழர்கள் பாவலர், மு. கருணாநிதி, அரங்கராசு ஆகியோர் பேசுவர்.

வருக கறுஞ்சட்டையுடன்!

வாழ்க்கை ஒப்பந்தங்கள்

பெரியதனூர் திராவிட கழக அமைப்பாளரும், சிறந்த தொண்டருமாகிய தோழர் க. சண்முகம் அவர்களுக்கும், தோழர் சீனிவாசன் அவர்கள் தங்கை தோழியர் சுந்தரம் பாளுக்கும் 3-6-46ல் திருச்செங்கோடு தமிழாசிரியர் தோழர் உலகஊழியர் தலைமையில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக குடியரசு, விடுதலை, திராவிடநாடு, தொழிலாளர் மித்திரன் ஆகியவைகளுக்கு முறையே ரூ. 5 நன்கொடையாக அனுப்பப்பட்டது. தங்கட்கு வாழ்த்துக்களும், பரிசுகளும் அளித்த தோழர்களுக்கு தங்கள் நன்றியறிதலை மணமக்கள் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

o o

29-4-46. மேலமருதா நல்லூரில் தோழர் நடேசன் தலைமையில் நடைபெற்ற முத்தையா—சானகியம்மாள் திருமணத்தில் தோழர்கள் மணி, சேரன் பேசினர். குடி அரசுக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

o o

1-5-46ல் பட்டுக்கோட்டை தோழர் முகமது மீராசாயபு மகளார் சகிதம்பாளுக்கும் நாகூர் தோழர் சேக்கு அலாவுதீனுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

o o

7-5-46ல் பட்டுக்கோட்டையில் தோழர் என். இரத்தினசாமி தலைமையில் தோழர் அருணாசலம் தையநாயகி வாழ்க்கை ஒப்பந்தத்தில் தோழர் க. அன்பழகன் உள்பட பலர் பேசினர்.

o o

1-5-46ல் திட்டக்குடி சப்ரிஜிஸ்டிரார் முன்னிலையில் வதிஷ்டபுரம் தோழர் நாராயணன் தோழியர் ரத்தினம் அம்மையாருடன் செய்து கொண்ட வாழ்க்கை ஒப்பந்த நினைவாய் குடி அரசுக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

o o

6-5-46ல் தர்மபுரி தோழர் வா. தி. அங்கமுத்து அவர்கள் மகளார் செயலக்குமிக்கும், தோழர் கோபாலனுக்கும் இளிச்சாட்டு இறையொளியனார் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

o o

6-5-46ல் திருவத்திபுரத்தில் கன்னியப்பன்—செகதாம்பாள், மார்க்க சகாயன்—மரகதாம்பாள், பாவாடை மூர்த்தி—பச்சையம்பாள், கோவிந்தராசன்—முருவாத்தாள் ஆகிய தோழர்களுக்கு நடந்த சீர்திருத்த திருமணத்தின்போது உள்ளூர் சுயமரியாதை திராவிட இளைஞர் கழகம் குடி அரசு, திராவிடநாடு ஆகியவை வளர்ச்சிக்கு ரூபா 4, 2, 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

9-5-46ல் கட்டிப்பாளையத்தில் தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற தோழர் சாமிநாதன் தமிழ் மணத்தில் தோழர் கணபதி பேசினார். ரூ 1 குடி அரசுக்கு வழங்கப்பட்டது.

o o

17-5-46ல் இராமநாதபுரம் செம்பனூர் தமிழாசிரியர் சே. ராமசாமி அவர்களின் மகள் பழனியம்மைக்கும் செல்வராசன் பேட்டை ப. பெரியசாமி அவர்கள் மகன் தோழர் பெ. சுப்பையா அவர்கட்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

o o

26-5-46ல் மாஜிமணியம் எஸ்.கே ஆறுமுகம் அவர்கள் மகன் எஸ். எ. குப்புராஜ்—எஸ். கே. இலட்சுமி காந்தம வாழ்க்கை ஒப்பந்தம் ஷையூர் சினிமா தியேட்டர் முதலாளி தோழர் எஸ். எல். எஸ். மணியம் தலைமையில் நடைபெற்றது. பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர்.

o o

28-5-46ல் தூத்துக்குடி டேவிஸ்புரம் பெரியார் திராவிட இளைஞர் கழக செயற்குழு உறுப்பினர் தோழர் மு. சண்முகம்—சு. பிச்சம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் கே. தானமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ராமசாமி, ஆர்தர் கோப் பேசினர்.

o o

22-5-46ல் விருதுநகர் தோழர் ச. தே. மாரியப்பன்—வீ. இலக்குமி வாழ்க்கைத் திருமணம் தோழர் தெ சி. க. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றதன் நினைவாக குடிஅரசுக்கு ரூ. 1. அளிக்கப்பெற்றது

o o

20-5-46ல் பாபநாசம் பேட்டை அக்கிராகாரத்தில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தோழர் ராசகோபால்—மங்கையர்க்கரசி வாழ்க்கை ஒப்பந்தத்தில் தோழர்கள் ஆரூர் மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், சனார்த்தனம், புலவர் ஆறுமுகம், சுப்பையன், காளியப்பன் ஆகியோர் பேசினர். தோழர் என். எஸ். வாசன் இசையளித்தார். நினைவாக குடிஅரசு ரூ.1. பெற்றது.

o o

20-5-46ல் கீவளூர் தோழர் பொன்னுசாமி— அருமைக்கண்தேவி வாழ்க்கை ஒப்பந்தம் நாகை சிவராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

o o

29-4-46ல் கீவளூரில் மேலதுறை தோழர் கோபால்—பத்மா வாழ்க்கை ஒப்பந்தம் நாகை தோழர் சிவராமசாமி தலைமையில் நடைபெற்றது.

o o

3-6-46ல் தூத்துக்குடி பெரியார் இளைஞர் கழக ஆபிஸில் தோழர் சண்முகம்—பிச்சம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் தானமுத்து தலைமையில் ரூ. 15 செலவில் நடைபெற்றது.

o o

3-6-46ல் மதுரையில் தோழர் எம். எஸ். ராமசாமி தலைமையில் நடைபெற்ற தோழர் ராமசாமி—சோதிமணி வாழ்க்கை ஒப்பந்தத்தை குறித்து குடி அரசு, திராவிடநாடு முறையே ரூ. 1ம் மற்ற திராவிட கழகங்களுக்கு ரூ. 5ம் முறையே வழங்கப்பட்டது.

ஒழியாதா சாதித்திமிர்!

2-4-46 அன்று திருவானைக்காவலைச் சேர்ந்த கொண்டையம் பேட்டையில் வெயிலின் வெம்மை தாங்காது நடுப்பகல் சூட்டில் நடக்க காலில் செருப்பு போட்டுக்கொண்டு வந்த 12வயது சிறுவன் கொட்டை முத்து என்ற தாழ்த்தப்பட்ட உடன் பிறப்பாளனை "பறப்பயலே! உனக்கு செருப்பா?" என்ற மமதைகொண்டு அடித்துத் துன்புறுத்தியதைக்கண்ட எங்கள் உள்ளம் "கொலைவாளினை எடடா! மிகு கொடியோர் செயல் அறவே!" என்று பதைக்கின்றது என திம்மராய சமுத்திரம் செடியூல் திராவிட கழகத்தார் எழுதுகின்றனர்.

இயக்கச் செய்திகள்

13-4-46ல் செங்கம் திராவிடர் கழகச்சார்பில் கடைத்தெருவில் தோழர் ஜி. முத்துசாமி அவர்கள தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம். கே. குப்புசாமி, ஜகதீசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

25-4-46ல் திருச்செங்கோடு குமாரமங்கலத்தில் புலவர் ப. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் நல்லிபாளையம் வெ. இராமசாமி, ப. முனியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

20-4-46ல் ஈரோடு காரைவாய்க்காலில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஜா. பி. சனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன், சி. என். அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் அப்பாவு நன்றி கூறினார்.

24-4-46ல் திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் ஈரோடு காரைவாய்க்காலில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எ. சித்தையன், சனார்த்தனம், பெரியார் ஈ. வெ. ரா. ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் அப்பாவு நன்றி கூறினார்.

22-4-46ல் கணியூரில் தோழர் மதியழகன் தலைமையில் தோழர்கள் அன்பழகன், சனார்த்தனம், சுப்ரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

22-4-46ல் தண்டாரம்பட்டு திராவிடர் கழகச் சார்பில் தென்முடியனூர் கிராமத்தில் மணியம் தோழர் நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பா. சி. இராமச்சந்திரன், ர. நாமதேவ், வீ. திருமலத் திராவிடன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

21-4-46ல் தண்டாரம்பட்டு திராவிட இளைஞர் கழகக்கூட்டம் நடைபெற்று க, ச. படைக்கு ர. நாமதேவ் தலைவராகவும், வீ. திருமலைத் திராவிடன் கேப்டனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு வாரந்தோறும் கிராமங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. பா. சி. இராமச்சந்திரன் நல்ல தீர்ப்பு பற்றிப் பேசினார்.

21-4-46ல் சூலூர் திராவிடர் கழகக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்று எஸ். பி. சுப்ரமண்யம்' எஸ். ஏ. சுப்ரமண்யம் ஆகியோரை கமிட்டி அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொண்டதோடு, உறுப்பினர்கள் சேர்க்கவும், தலைவர்களை அழைத்து பொதுக்கூட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

சாக்கோட்டை சுயமரியாதைச் சமதர்ம சங்க 12வது ஆண்டுவிழா 28-4-46ல் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. கணபதி அனைவரையும் வரவேற்றார், எஸ். வி. கோபாலகிருஷ்ணன் ஆண்டு அறிக்கை படித்தார். தோழர்கள் பி. வேணுகோபால். ஆர். சொக்கப்பா, வி. லெட்சுமிபதி, கே. கே. நீலமேகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இசைபோட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. தீர்மானங்கள் நிறைவேறியபின், தலைவர் முடிவுரை கூறினார். தோழர் எஸ். ஆர். சாமி நன்றி கூறினார்.

26-4-46ல் தோழர் தண்டபாணி அவர்கள் தலைமையில் கல்லக்குறிச்சி பெரியார் திடலில் தோழர் சனார்த்தனம் 'திராவிடர் நிலை' என்பதுபற்றி அரிய சொற்பொழிவாற்றி கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர் தி. வாசு நன்றிகூறினார்.

வரவு செலவு

திலக்கோட்டை திராவிட மறுமலர்ச்சி இலவச வாசகசாலை நிதிக்காக 9, 10-2-46 தேதிகளில் நடத்திய லெட்சுமிகாந்தன், போர்வாள் நாடகங்களின் வசூல் வரவு ரூ. 3144-4-0, நடிகர் வழிச்செலவு, தமாஷா வரி, கொட்டகை ஆகிய எல்லாச்செலவும் ரூ. 2341-2-0 மீதி ரூ. 803-2-0, கிறுவை ரூ. 302-0-0 இருப்பு ரூ. 501-2-0 என பி.எஸ்.வி. நாகரத்தினம் செயலாளர் அறிவிக்கிறார்.

நன்றி

ஈரோடு தோழர் கருப்பையாவுக்கும், தோழியர் குப்பாய் அம்மாளுக்கும் 6-2-46ல் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தத்தின்போது தங்களுக்கு பரிசுகளும் வாழ்த்துகளும் அளித்த தோழர்களுக்கு தங்கள் நன்றியறிதலை மணமக்கள் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

மறைவு

சேலம் அரிசிப்பாளையம் நமதியக்கத் தொண்டர் ரெங்கசாமி என்கிற தோழர் கே. வி. ஸ்டாலின் சென்னைக்கு சிகிச்சைக்கு சென்ற இடத்தில் 27-5-46ல் உயிர்நீத்தமைக்கு தங்கள் அனுதாபத்தை ஷை திராவிட கழகத்தார் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

0 0

15-5-46 மணக்காலில் தோழர் சுப்பிரமணியன் வாழ்க்கைத்துணைவி கனகம்மையார் இறந்தமைக்காக அனுதாபம் தெரிவித்த கூட்டத்தில் தோழர்கள் பேசி அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர்.

0 0

இராசபாளையம் திராவிட கழகத் துணைத் தலைவர் தோழர் மா. பொன்னையாவின் தந்தை மாரியப்பன் அவர்கள் 3-6-46ல் பாம்பு கடித்து இறந்தமைக்குறித்து ஷையூர் திராவிட கழகத்தார் தங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றனர்.

0 0

நாகை வெளிப்பாளையம் மணி பகுத்தறிவுக்கழகத் துணைச்செயலாளர் இளையசகோதரரும், திராவிட மாணவத் தோழருமான ஜோசப் தனராஜ் இயற்கை யெய்தியமைக்கு ஷை கழகத்தார் தங்கள் அனுதாபத்தைத்தெரிவிக்கின்றனர்.

0 0

இட்டக்குடி திராவிடர் இளைஞர் கழகத் தலைவர் தோழர் கு. கருப்பையாவின் துணைவியார் அசனாம்பாள் அம்மாள் இளமையில் மறைந்ததற்கு வருந்தி தங்கள் அனுதாபத்தை ஷை கழகத்தார் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

Edite, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.